**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 105/2019**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-3/ Lw - 2 |
| Name | : | Mr. பாபு |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.06.2025

1 முதல் 4 எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் புஷ்பா நகர் 4 வது வீதியில் வசித்து வந்து லோடுமேனாக வேலை பார்த்து வருகிறேன். 1 முதல் 4 ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியும். என் நண்பரின் தம்பிகள். சம்பவம் நடந்த மாதம் வருடம் தெரியாது. அன்றைய தேதியில் நான் மது போதையில் இருந்தேன். கதவை திறந்தேன் யாரோ வெட்டி விட்டார்கள். அதன் பிறகு எனக்கு நினைவு திரும்பிய போது நான் கோவை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தது தெரியவந்தது. சம்பவத்தன்று எனக்கு வெட்டு விழுந்த சமயத்தில் என்னுடைய அம்மாவையும் வெட்டி விட்டார்கள். சம்பவத்தின்

போது என்னை வெட்டியதால் தலையின் முன்பகுதி மற்றும் கழுத்தில் காயங்கள் ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. மருத்துவமனை சிகிச்சை முடிந்த பிறகு என்னை யார் வெட்டினார்கள் என்பதை கூட என் அம்மா என்னிடம் கூறவில்லை. என் அம்மா மற்றும் நான்கு நபர்களிடம் நான் யார் வெட்டினார்கள் என்று கேட்ட போது யாரும் அதைப்பற்றி என்னிடம் சொல்லவில்லை. இதைப் பற்றி நான் காவல் அதிகாரிகளிடமும் எதுவும் தகவல் தெரிவிக்கவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்த சமயம் இரவு நேரம் என்றால் சரி. அந்த சமயத்தில் வீட்டிற்கு அருகில் இருட்டாக இருந்தது என்றால் ஆமாம். அந்த சமயத்தில் வீட்டில் நான் மட்டும்தான் இருந்தேன் என்றால் ஆமாம். அந்த சமயத்தில் என்னுடைய அம்மா மற்றும் சகோதரர் வீட்டில் இல்லை. வேலைக்கு சென்று விட்டார்கள்.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.26 12:36:47 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 105/2019**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-4/Lw-8 |
| Name | : | Mr. அப்துல்அதீஸ் |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.06.2025.

1 முதல் 4 எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் ஹவுசிங் போர்டில் வசித்து வந்து லோட் மேனாக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.3 என்னுடைய மகன். வழக்கு விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வேலைக்கு சென்று விட்டேன். என்னுடைய மகனை யாரோ நான்கு நபர்கள் தாக்கி விட்டதாக தகவல் சொன்னார்கள். என்னுடைய மகனை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்ததாக சொன்னதன் பேரில் நான் அரசு மருத்துவமனைக்கு சென்று என் மகனைப் பார்த்தேன். அந்த சமயத்தில் என்னுடைய மகன் நிதானம் இல்லாமல் இருந்தார் என் மகனே மேல்

சிகிச்சைக்காக கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். என்னுடைய மகனை யார் வெட்டினார்கள் என்று விசாரித்தேன். ஆனால் யார் என்று தெரியவில்லை. ஆஜர் எதிரிகளை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை. இப்பொழுதுதான் பார்க்கிறேன். சம்பவத்தினால் என் மகனுக்கு தலை, மூக்கு, கழுத்து பகுதிகளில் காயம் ஏற்பட்டது. என்ன பிரச்சனை என்று விசாரித்த போது சண்டை என்று சொன்னார்கள். கோயம்புத்தூர் மருத்துவமனையில் என் மகனை காவல் அதிகாரி வந்து விசாரித்தார். அரசு மருத்துவமனையில் காவல் அதிகாரிகள் விசாரணை நடத்தி சம்பவத்தின் போது என் மகன் அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த பனியனை வாங்கிக் கொண்டார்கள். அதை பொறுத்து ஆவணம் எழுதி ஒரு கையொப்பம் பெற்றார்கள். தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது.

2. நான் கையொப்பம் செய்த ஆவணம் கைப்பற்றுதல் மகஜர். அது அ.சா.ஆ–6 . போலீசார் என் மகனிடம் இருந்து சம்பவத்தன்று அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த பனியன் தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியும். என் மகன் அணிந்திருந்த வெள்ளை கலர் ரத்தக்கறை பனியன் தான் போலீசார் சம்பவத்தை பற்றி விசாரித்தார்கள்.அதன் பிறகு நான் கையொப்பம் செய்தேன்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் போலீசார் என்ன எழுதி இருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரி.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.26 12:36:56 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.